நியமிக்கப்பட இருக்கிறார்களா? இன்றென்று, அரசினுடைய நிதி ஆதாரங்களை எடுக்காமல், ஒன்றியங்களிலிருந்து சம்பளத்திற்காக நிதியை கொடுக்கக்கூடிய முறையிலே தமிழாசிரியர்களை நியமிக்க அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இத்தமிழாசிரியர் பதவிகளை தமிழாசிரியர்கள் இல்லாத 6 முதல் 8 வகுப்புகளில் 4 பிரிவுகள் அல்லது அதற்கு மேலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி, மாநகராட்சி மற்றும் அரசு நடுநிலைப் பள்ளிகள், உயர்தர ஆரம்பப்பள்ளிகள் முதலியனவற்றிற்கு தேவைக்கேற்றாற்போல் வழங்கவேண்டுமென்றும் அவ்வாறு பகிர்ந்து அளித்தபின் மீதமுள்ள பதவிகளை இதே நிலையிலுள்ள தனியார் பள்ளிகளுக்குக் கொடுக்கப்படல் வேண்டுமெனவும், இவ்வாறு இப்பதவிகள் வழங்கப்படும்பொழுது பி.டி. ஆசிரியர் ஊதிய விகிதத்தில் தலைமை ஆசிரியர் பதவி வகிக்கும் பள்ளிகளுக்கு முதலிடம் கொடுக்கப்படவேண்டுமெனவும் அதற்குப் பின்னரே இடைநிலை பயிற்சிபெற்ற ஆசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாகக் கொண்டுள்ள மற்ற பள்ளிகளுக்கு மீதமுள்ள இப்பதவிகளை வழங்கல் வேண்டுமென பள்ளிக் கல்வி இயக்குநர் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்குஅறிவுரை வழங்கியுள்ளார்.

ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் நிதியிலிருந்து சம்பளம் தரும் வாய்ப்பை ஆராய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள். பள்ளிகளுக்குத் தரப்படும் மானிய அடிப்படை பற்றிய கேள்வியாக இருப்பதால் அதை நான் கவனத்தில் எடுத்துக் கொள்கிறேன்.

துவக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்

*594 வினா—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

எல்லா துவக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் பணிப் படி (Duty Allowance) கொடுக்கப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

திரு. தி. அன்பழகன் : தலைவரவர்களே, துவக்கப் பள்ளிகளில் ஓராசிரியராகப் பணி புரிபவர்களுக்கும் பணிப்படி கொடுக்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மூன்று ஆசிரியர்கள் மட்டுமே (தலைமை ஆசிரியர் உள்பட) பணியாற்றும் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட்டு

1978 மார்ச் 16]

வந்த பணிப்படி ரூ. 5 நிறுத்தப்பட்டு விட்டது என்றும், இதனை அரசு மறுபரிசீலனை செய்து ஏற்கனவே, பணிப்படியாக கொடுத்து வந்த ரூ. 5, 3 ஆசிரியர்களையும், 300-க்கு குறைவான மாணவர்களைக் கொண்ட ஆரம்ப பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்களுக்கு, தொடர்ந்து கொடுக்க வேண்டுமென்று ஆசிரிய மன்றங்கள் அரசுக்கு மனுக்கள் கொடுத்துள்ளன. இதன்பேரில், பள்ளிக் கல்வி இயக்குநரின் குறிப்புரை கேட்கப்பட்டு அவரது குறிப்புரையும் கிடைக்கப் பெற்றுள்ளது. நிதித்துறையுடன் கலந்தாலோசித்து விரைவில் முடிவு எடுத்து தக்க ஆணை வெளியிடப்படும்.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, கேரளம், மேற்கு வங்கம் ஆகிய அரசுகளில் ஐந்தாண்டுகளாகப் பதிவு செய்தும் வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு அன்-எம்ப்ளாய்மெண்ட் அலவன்ஸ் கொடுப்பது என்பதற்கேற்ற முறையில் சட்டங்களை இயற்றியிருக்கின்றன. அதைப்போல் இல்லாவிட்டாலும் தமிழ்நாட்டில் பி.டி. படித்தவர்கள், புலவர் படிப்பு படித்தவர்கள் பதிவு செய்தும் ஐந்தாண்டுகளாக வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு அன்-எம்ப்ளாய்மெண்ட் அலவன்ஸ் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. யா. சை. மு. யூசுப்: தலைவரவர்களே, ஓராசிரியர் பள்ளி நடைமுறைக்குச் சாத்தியமாக இல்லாத முறையில் இருப்பதால், ஒரு ஆசிரியரை வைத்துத் தகுந்த கல்வியை மாணவர்களுக்குத் தர முடியாத காரணத்தால் ஓராசிரியர் பள்ளிகளை மாற்றிவிட்டு இரண்டு மூன்று ஆசிரியர்களை நியமிக்கும் உத்தேசம் உண்டா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, கல்வியின் தரத்தை உயர்த்துவதில் இந்த அரசுக்கு மிகுந்த அக்கறை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. மெ. ராஜு: தலைவரவர்களே, மூன்று ஆசிரியர்கள் பணியாற்றும் இடங்களில் டியூட்டி அலவன்ஸ் கொடுப்பது பற்றிச் சொன்னார்கள். ஓராசிரியர் இருக்கும் பள்ளிகளுக்கும் டியூட்டி அலவன்ஸ் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்பொழுது கொடுத்துவந்த முறையில் மாறுதலை நிவர்த்திக்கும் முறையில்தான் அதைத் திருப்பித் தரப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நகராட்சிப்பள்ளி ஆசிரியர்கள்.

*595.—வினா. திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பஞ்சாயத்து ஒன்றியங்களில் செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக வர வாய்ப்பளிக்கும் அரசு ஆணை எண். 1219, 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ந் தேதியின் உத்திரவினை நகராட்சி ஆசிரியர்களுக்கும் விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

அரசின் ஆய்விலுள்ளது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இந்த 12, 19-ந் தேதி ஆணை என்பது — ஒரு நான்கு நாட்களுக்கு முன்புதான் நான் அறிந்தேன் — அதை ரத்து செய்துவிட்டு 130 எண். கொண்ட ஒரு ஆணை புதிதாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று. இதனால் ஒரே குழப்பமாக இருக்கிறது. முதல் ஆணை, 'டேட் ஆஃப் அப்பாயிண்ட்மெண்ட்'டிலிருந்து எய்டட் ஸ்கூலிலிருந்து பஞ்சாயத்து யூனியனுக்கு அப்சார்ப்ஷன் செய்யும் பொழுது சீனியாரிட்டி என்று சொல்லிவிட்டு, இரண்டாவது ஆணையில் 'டேட் ஆஃப் அப்பாயிண்ட்மெண்ட் இன் பஞ்சாயத்து யூனியன்' என்று வந்து, பிறகு 130 எண். கொண்ட ஆணை வந்திருக்கிறது. தயவு செய்து இந்த 130 ஆம் எண் ஆணையை கேன்சல் செய்து விட்டு, எய்டட் ஸ்கூலாக இருந்தாலும் ஒரே சீனியாரிட்டி என்று கொண்டுவரப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் சிலர் இது தொடர்பாக உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். அங்கு கிடைத்த தீர்ப்பையொட்டித்தான் புதிய ஆணை பிறப்பிக்கப் பட்டது. நகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள் கொடுத்த ரிட்மனு மீது இன்னும் தீர்ப்பு வழங்கப்படவில்லை. அப்படித் தீர்ப்பு வழங்கப்படாமல் இருக்கும்பொழுது ஆணை பிறப்பிக்கலாமா என்று சட்டத்துறையோடு ஆலோசனை நடைபெற்று வருகிறது.